# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2023/59 - 2017 ජූනි මස 16 වැනි සිකුරාදා - 2017.06.16

2023/59 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: RBK/LAN/AQURE/A3/19.
காணி அமைச்சின் கோவை இல.: LD/05/2009/Z/302.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின் றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், ரம்புக்கனைப் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 9பி, யோதகம கிராம அலுவலர் பிரிவில் அமைந் துள்ள நில அளவை மா அதிபரினால் அளந்து தயாரிக் கப்பட்ட ஆ. வ. கே. 3514 இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு.

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: தொடம்கஸ்தென்ன; விபரம்: வத்த; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: என். எஸ். ஜே. எஸ். கருணாரத்தின, யோதகம, பின்னவல மற்றும் ஐ. பிரசன்ன குணதிலக, வாகொல்ல, ரம்புக்கனை; விஸ்தீரணம்: 0.6454 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோரும் அல்லது வேறு ஏதாவது தொடர்புகளைக் கொண்ட சகலரும் தாமாகவோ அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாகவோ 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ரம்புக்கனைப் பிரதேச செயலகத்தில் எனது முன்னிலையில் தோன்றுதல் வேண்டும்.

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளைக் கொண்ட ஆவணத்தின் மூலம் எனக்கு அறிவித்தல் வேண்டும்.

ஆர். பீ. மொஹான் விஜேரத்தின,
பிரதேச செயலாளர்,
ரம்புக்கனை.

பிரதேச செயலகம்,
ரம்புக்கனை,
2017, யூன் 12.

6 - 1152

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: வ/18/71/2005.

2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 7 ஆந் திகதி 1813/27 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூன்றாம் பிரிவின் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இலக்கம் 3834 இல் துண்டு 01, துண்டு இலக்கங்கள் 34, 35 மற்றும் 36 என திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தருகின்றேன்.

1. **துண்டு இல. 34**

காணியின் பெயர்: மாதன்கஹாவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எஸ். சீ. டீ. குணவர்தன; விஸ்தீரணம்: 0.0210 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 35**

காணியின் பெயர்: - ; விபரம்: வீதி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஆர். ஜே. விலத்கமுவ; விஸ்தீரணம்: 0.0020 ஹெக்டயார்.

3. **துண்டு இல. 36**

காணியின் பெயர்: மாதன்கஹாவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி உள்ளது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஆர். ஜே. விலத்கமுவ; விஸ்தீரணம்: 0.0166 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக இல. 34 தொடக்கம் 36 வரையான காணிகளுக்கு 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யு. ஜீ. பிரேமலால்,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2017, யூன் 07.

6 - 1153